**STARTING TIME 02.42 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 233/2019**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 23.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **ஜானகிராமன்** Father's Name : **பக்தவச்சலு**

Address : **சுப்பாநாயுடு கண்டிகை கிராமம், அரக்கோணம் வட்டம், இராணிப்பேட்டை மாவட்டம்.**

Age : 70

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

10. எனது தகப்பனார் காலமான பிறகு தாவா சொத்துக்களுக்கான பட்டா எனது தாயார் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதால், அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

11. இவ்வழக்கு சொத்தில் எனக்கு பாகம் உள்ளதா என்றால், உள்ளது. அதேபோல், வாதிக்கும் தாவா சொத்துக்களில் 1/15 பாகம் உள்ளதா என்றால், சரிதான். 2, 7 பிரதிவாதிகள் தான் செலவு செய்து வாதிக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை, இனிமேல் தாக்கல் செய்வேன்.

12. எனது அம்மா உயிருடன் இருந்த வரை, வாதிக்கும், அவரது சகோதரியான 6-ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தின் ஒரு

பாகத்தை கொடுத்து வந்தார் என்றால், சரியல்ல. எனது தாயார் காலமான பிறகு தாவா சொத்துக்களை வாதியும், நானும், 2 முதல் 7 வரை பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால், சரியல்ல.

13. வாதியின் தாயார் வழி பாட்டி பெயர் ரவணம்மாள் என்றால், சரிதான். எனது தாயார், 2–ம் பிரதிவாதி பெயருக்கு ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால், சரிதான். அந்த பத்திரத்தில் உள்ள சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதால் அந்த செட்டில்மெண்ட் எழுதி வைக்க எனது தாயாருக்கு உரிமை இல்லை என்றால், சரியல்ல, அந்த ஆவணத்தை எனது தாயார், நான், எனது தம்பி சுதாகர், மற்றொரு தம்பியான 4–ம் பிரதிவாதி விஜயகுமார் ஆகியோர் சேர்ந்து எழுதிக் கொடுத்தோம், அந்த விவரம் வாதிக்கும் நன்கு தெரியும். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை நானும், எனது தம்பிகளும் கையெழுத்து செய்யவில்லை என்றால், சரியல்ல, நாங்கள் மூவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்து கொடுத்துள்ளோம்.

14. கடந்த 01.03.2007 அன்று தாவா சொத்துக்களின் ஒரு பகுதியை 2–ம் பிரதிவாதி 8–ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.3 ஆவணம் கிரையம் செய்துக் கொடுத்துள்ளார் என்றால், 2–ம் பிரதிவாதி நேரடியாக விற்பனை செய்யவில்லை, நாகேஷ்வரராவ் என்பவருக்கு பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்து அவர் 8–ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். அவ்வாறு கிரையம் செய்துக் கொடுத்த சொத்தும் கூட்டுக் குடும்ப சொத்து என்பதால் அந்த கிரையம் செல்லாது என்றால், சரியல்ல, 2–ம் பிரதிவாதி அவர் பெயரில் எழுதி வைத்த சொத்தை பொறுத்து தான் கிரையம் கொடுத்தார்.

15. அதேபோல், 20.06.2007 அன்று 8–ம் பிரதிவாதி கிருஷ்ணன் கிரையம் பெற்ற சொத்தை ரகுபதி என்பவருக்கு விற்பனை செய்தார் என்றால், சரிதான். இந்த கிரையப் பத்திரமும் செல்லாது என்றால், சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதிக்கும் பாகம் இருக்கும் நிலையில் நாங்கள் தாவாவை பொய்யாக நடத்தி

வருகிறோம் என்றால், சரியல்ல. நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளதாக கூறும் செட்டில்மெண்ட் பத்திரமும் சட்டப்படி செல்லாது என்றால், சரியல்ல. வாதிக்கு தாவா சொத்துக்களில் பாகம் கொடுக்க கூடாது என்பதற்காக வேண்டியே மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் இரண்டு கிரையப் பத்திரங்களை பொய்யாக ஏற்படுத்தியுள்ளோம் என்றால், சரியல்ல. எனவே, வாதி கோரியவாறு வழக்கில் தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல, வாதி தான் பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார், எனவே, தாவாவை எனது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

1–ம் பிரதிவாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME 03.04 P.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.02.23 15:36:22 +0530